MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME - II ISSUE - 2 FEB -2025
E-ISSN : 2584 - 1238

# ஆற்றுப்படையில் இசை உரிச்சொற்கள்

**திருமதி மு.பூங்கோதை,**
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்), மதுரைகாமராசர்பல்கலைக்கழகம், மதுரை.
உதவிப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி.
மின்னஞ்சல் - poonkothai-tam@sfrcollege.edu.in - அலைபேசி-7010350017
DOI 10.5281/zenodo.14788426.

**Abstract :**

When man lived as nomads without civilization, sound signals were used. Then he shared his ideas. Then sound took on a symbolic form and became strong as a language. As civilization grew, language began to flourish. Words emerged as its expression. Over time, grammarians have classified words into four categories: noun, verb, interjection, and adjective. Among these, adjectives have been recorded as words that are labeled as belonging only to poems. In order to complete this, since there are very few lexical studies that examine the structure and meaning of words in the world of research, this article examines the definitions given by grammar books about adjectives and thereby examines the nature of the use of musical adjectives in ancient atrupada books.

**Keywords**

Word - Adjective - Simple - Gambalai - Iambal - Music

## முன்னுரை

நாகரீகம் இன்றி மனிதன் நாடோடி களாக வாழ்ந்த போது ஒலிக்குறிப் புகள். பின்பு வழி கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டான். பின் ஒலியானது குறியீட்டு வடிவம் பெற்று மொழியாக வலுப்பெற்றது. நாகரீகம் வளர வளர மொழி யானது வளம் பெறத் தொடங்கியது. அதன் வெளிப்பாடாகச் சொ ற்கள் தோற்றம் பெற்றன. காலந்தோறும் இலக்கண ஆசிரியர்கள் சொற்களை பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்று நான்காகப் பாகுபடுத்தினர். இவற்றுள் செய்யுளுக்கு மட்டுமே உரிமை பூண்டவை என்று முத்திரையிடப்பட்ட சொல்லாக உரிச்சொல் பதிவு செய்யப்பட்டுள்ளது. சொற்களின் அமைப்பையும் , பொருள் புலப்பாட்டையும் ஆராய்கின்ற சொல்லாய்வுகள் ஆய்வுலகில் மிகக் குறைவு என்கிற நிலையில் அதனை நிறைவு செய்யும் பொருட்டு உரிச்சொல்லினைப் பற்றி இலக்கண நூல்கள் கூறுகின்ற வரையறைகளை ஆராய்ந்துஅதன்வழிபழைமைவாய்ந்தஆற்றுப்படைநூல்களுள்இசைஉரிச்சொற்கள்கையாளப்பட்டுள்ள தன்மையை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## தமிழில் சொல் வகைப்பாடு

தமிழ்ச் சொற்களுள் பெயர் மற்றும் வினைச்சொல் முதன்மை வாய்ந்தவை என்று தொல்காப்பியர் சுட்டுகின்றார். அதனை,

**“சொல்எனப் படுப பெயரே வினையென்று**
**ஆயிரண்டு என்ப அறிந்திசி னோரே”**[1]

என்ற நூற்பாவின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும் , பெயர், வினைகளைச் சார்ந்து தோன்றும் சொற்களாக இடைச்சொல் மற்றும் உரிச்சொல்லினைச் சுட்டுவதை,


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

**“இடைச்சொல் கிளவியும் உரிச்சொல் கிளவியும்**
**அவற்றுவழி மருங்கின் தோன்று மென்ப”[2]**

என்ற நூற்பாவின் வழி அறிந்து கொள்ள முடிகின்றது.

**இலக்கண நூல்களில் உரிச்சொல்**

தமிழில் சொற்களின் இலக்கணத்தையும் , செயல்களையும், தன்மைகளையும் பற்றிப் பேசுகின்ற இலக்கண நூல்கள் எண்ணற்றவை இருக்கின்றன. அவற்றை,

- **ஓரிக்கண நூல்கள்**,
- **ஈரிலக்கண நூல்கள்**,
- **ஐந்திலக்கண நூல்கள்**,
- **அறுவகை இலக்கண நூல்கள்**

என்று வகைப்படுத்தி காண்கின்ற போது தொல்காப்பியம் முதல் அறுவகை இலக்கணம் வரையிலான பதினொன்று நூல்கள் உரிச்சொல் பற்றி பேசுகின்றன.

| | | |
|---|---|---|
| **ஓரிலக்கண நூல்கள்** | சொல் | இலக்கண கொத்து<br>பிரயோக விவேகம் |
| **ஈரிலக்கண நூல்கள்** | எழுத்து, சொல் | நேமிநாதம்,<br>நன்னூல் |
| **ஐந்திலக்கண நூல்கள்** | எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி | தொல்காப்பியம்<br>வீரசோழியம்<br>தொன்னூல் விளக்கம்<br>முத்துவீரியம்<br>சுவாமிநாதம்<br>இலக்கண விளக்கம் |
| **அறுஇலக்கண நூல்கள்** | எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, புலமை | அறுவகை இலக்கணம் |

மேற்சொன்ன இலக்கண நூல்களின் வரிசைப் பட்டியலில் தொல்காப்பியம் , நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், நேமிநாதம் போன்ற நூல்களில் உரிச்சொல்லிற்கென்று தனித்த இயல்கள் கொண்டுள்ளன. ஆனால் , முத்துவீரியம், வீரசோழியம், பிரயேக விவேகம் , சுவாமிநாதம், இலக்கணக்கொத்து, அறுவகை இலக்கணம் ஆகியவற்றில் உரிச்சொல்லிற்கெனத்


http://Creativecommons.org//license/by/4.0/.

தனித்த இயல்கள் இல்லையென்ற போதிலும் , சொல்லதிகாரத்தின் இறுதியில் உரிச்சொல்லைப் பற்றிக் ஓரிரு நூற்பாக்களில் கூறிச்செல்கின்றன.

**தொல்காப்பியம்**

தமிழில் கிடைக்கின்ற முதன்மையான இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். இதன் ஆசிரியர் தொல்காப்பியர் ஆவார். காலம் கி.மு 5ம் நூற்றாண்டு ஆகும். தொல்காப்பியம் எழுத்து , சொல், பொருள் என்ற மூன்று அதிகாரங்களைக் கொண்டது. ஒவ்வொரு அதிகாரத்திற்கும் 9 இயல்கள் வீதமாக 27 இயல்களும் 1610 நூற்பாக்களும் உள்ளன.

சொல்லதிகாரத்தில் எட்டாவது இயலாக உரியியல் அமைந்துள்ளது. அவ்வியலில் மொத்தம் 100 நூற்பாக்களில் உரிச்சொல்லினைப் பற்றி தொல்காப்பியர் பேசுகின்றார். உரிச்சொற்களின் இலக்கணம் பற்றி தொல்காப்பியர்,

**“உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை**
**இசையினும் குறிப்பினும் பண்பினுந் தோன்றிப்**
**பெயரினும் வினையினும் மெய்தடுமாறி**
**ஒருசொற் பலபொருட்கு உரிமை தோன்றினும்**
**பலசொல் ஒருபொருட்கு உரிமை தோன்றினும்**
**பயிலாத வற்றைப் பயின்றவை சார்த்தித்**
**தத்த மரபிற் சென்றுநிலை மருங்கின்**
**எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்”**[3]

என்ற நூற்பாவில் உரிச்சொல்லின் தன்மைகளைக் கூறுகின்றார். எழுத்ததிகாரத்தில் உரிச்சொல்லினை தொல்காப்பியர் குறைச்சொற்கிளவி என்று சுட்டுவதை,

**“உயிரும் புள்ளியும் இறுதியாகிக்**
**குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றி**
**நெறிப்பட வாராக் குறைச் சொற்கிளவி”**[4]

என்ற நூற்பாவின் வழி உரிச்சொல் நெறியின்றி வரும் தன்மையை அறிந்துகொள்ள முடிகின்றது. மேலும், தொல்காப்பியர்

**“எழுத்துப்பிரிந் திசைத்தல் இவணியல்பு இன்றே”**[5]

என்ற நூற்பாவின் வழி உரிச்சொற்கள் , எழுத்துக்கள் பிரிந்து வேறு வேறு பொருள் உணர்த்தும் தன்மை உடையது இல்லை என்ற தன்மையினை இந்நூற்பா பதிவு செய்துள்ளது.

தொல்காப்பியரின் மேற்சொன்ன நூற்பாக்களின் வழியாக உரிச்சொல்லானது,

- **இசை, பண்பு, குறிப்பில் தோன்றல்**
- **பெயர் மற்றும் வினையில் மெய்தடுமாறல்**
- **ஒருசொல் பலபொருள் தரல்**
- **பலசொல் ஒருபொருள் தரல்**
- **நெறிப்பட வாரா குறைச்சொற்கிளவி**
- **எழுத்துப் பிரிந்து இசையா பண்பு**

போன்ற ஆறு தன்மைகள் பெறப்படுகின்றன. இவற்றுள் இசை தன்மையில் உரிச்சொற்கள் காணப்படுவதை ஆற்றுப்படையில் பொருத்திக் காண்பதே நோக்கமாகும்.

**தொல்காப்பியர் சுட்டும் இசை உரிச்சொற்கள்**


http://Creativecommons.org//license/by/4.0/.

ஒலியை குறிக்கின்ற சொற்களை இசை உரிச்சொற்கள் என்று தொல்காப்பியர் உரியியலில் சுட்டுகின்றார். தொல்காப்பியம் சுட்டும் 120 உரிச்சொற்களுள் 9 சொற்கள் இசையை உணர்த்தும் சொற்களாக உள்ளன.

இசை குறித்த உரிச்சொற்களைத் தொல்காப்பியர் மூன்று நூற்பாக்களில் குறிப்பிட்டுள்ளார் என்பதை,

**“கம்பலை சும்மை கலியே அழுங்கல்**
**என்றிவை நான்கும் அரவப் பொருள”**[6]
**“இசைப்பு இசையாகும்”**[7]
**“துவைத்தலும் சிலைத்தலும் இயம்பலும் இரங்கலும்**
**இசைப்பொருள் கிளவி என்மனார் புலவர்”**[8]

என்ற நூற்பாக்களின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது. தொல்காப்பியரின் நூற்பாக்களின் வழி இசைப்பு , துவைத்தல், சிலைத்தல், இயம்பல், இரங்கல், கம்பலை, சும்மை, கலி, அழுங்கல் என்ற நூற்பாக்கள் இசை உரிச்சொற்களாக கூறப்படுகிறது. மேற்சொன்னவற்றுள் அழுங்கல், இரங்கல் இவையிரண்டும் இசைப்பொருள் மட்டுமில்லாது குறிப்புப் பொருளும் உணர்த்துவன. இதனை,

**“அழுங்கல் இரக்கமும் கேடும் ஆகும்”**[9]
**“இரங்கல் கழிந்த பொருட்டும் ஆகும்”**[10]

என்ற இரு நூற்பாக்கள் பதிவு செய்கின்றன. ஆற்றுப்படையில் இசை உரிச்சொற்களாக சும்மை , துவைத்தல், சிலைத்தல், கம்பலை, கலி, இசைப்பு, இரங்கல், இயம்பல் ஆகிய எட்டு உரிச்சொற்கள் வழங்குகின்றன.

**சும்மை**

அரவம் என்ற இசைப்பொருண்மையினை சுட்டும் சும்மை என்ற உரிச்சொல் ஆற்றுப்படையில் இரண்டு இடங்களில் வந்துள்ளது.

| வ.எண் | வருகையிடம் | பொருள் |
|---|---|---|
| 1 | இழுமென் **சும்மை** (பொரு.ஆற்.,65) | ஓசை |
| 2 | ஒலிக்கும் **சும்மை**யொடு (மலை.,483) | ஆரவாரம் |

தொல்காப்பியர் சும்மைக்கு அரவம் அதாவது ஓசை என்றே விளக்கம் அளிக்கின்றார். ஆற்றுப்படையிலும் அதே பொருண்மையில் சும்மையென்ற சொல் கையாளப்பட்டுள்ளது. சும்மை என்பதற்கு “ஆவிரை , ஊர், ஒலி, சுமை, நகர், நாடு, நெற்போர்”[11] போன்ற பொருள்களும் வழங்கப்படுவதை கழகத் தமிழ் அகராதியின் வழி தெரிந்து கொள்ள முடிகின்றது.

**துவைத்தல்**

தொல்காப்பியம் சுட்டும் துவைத்தல் என்ற உரிச்சொல் மலைபடுகடாம் (அ) கூத்தராற்றுப்படை என்று சுட்டப்படுகின்ற ஆற்றுப்படை இலக்கியத்தில் ஒரே ஒரு இடத்தில் மட்டும் பயின்று வந்துள்ளது.


http://Creativecommons.org//license/by/4.0/.

| வ.எண் | வருகையிடம் | பொருள் |
|---|---|---|
| 1 | கறங்கு மணி **துவைக்கும்** (மலை.,573) | ஆரவாரம் |

மலைபடுகடாமில் துவைத்தல் என்ற உரிச்சொல்லிற்கு ஆரவாரம் என்ற பொருண்மையில் பயன்படுத்தப்பட்டுள்ளதை தெரிந்து கொள்ள முடிகின்றது. துவைத்தல் என்பதற்கு இசை தவிர்த்து , “ஒலித்தல், ஆடைதுவைத்தல், குற்றுதல், கடைதல், தோய்க்குதல், பானம் பண்ணுதல் , பேரொலி, வாச்சியம் வாசித்தல் , விடுதல், ஆரவாரித்தல்”[12] போன்ற பொருண்மைகளும் வழங்கப்படுவதை கழகத் தமிழ் அகராதி வழி பெறமுடிகின்றது. தற்காலத் தமிழ் அகராதியான க்ரியா அகராதி துவைத்தல் என்பதற்கு , “துணிகளைத் தண்ணீரில் நனைத்து அல்லது கசக்கி அழுக்கு நீக்குதல் , அடித்தல், உதைத்தல்”[13] என்று விளக்கம் தருகின்றது. க்ரியா அகராதியின் இவ்விளக்கத்தில் இருந்து துவைத்தல் என்ற சொல் இலக்கியச் சொல் என்ற நிலையில் மாறுபட்டு தற்காலத்தில் மக்களின் பேச்சு வழக்கு சொல்லாய் உருப்பெற்று இருப்பதை காண்பிக்கின்றது.

**சிலைத்தல்**

இசைப்பொருளை உணர்த்தும் சிலைத்தல் என்ற உரிச்சொல் திருமுருகாற்றுப்படையில் ஒரு இடத்திலும், பெரும்பாணாற்றுப்படையில் மூன்று இடங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

| வ.எண் | வருகையிடம் | பொருள் |
|---|---|---|
| 1. | நல்ஏறு **சிலைப்பச்** (திரு.முரு.,315) | முழங்கல் |
| 2. | நடுவட் **சிலைப்பச்** (பெரும்.,144) | |
| 3. | வல்லேறு **சிலைப்பினும்** (பெரும்.,135) | இடித்தல் |
| 4. | எந்திரஞ் **சிலைக்கும்** (பெரும்.,260) | ஆரவாரம் |

இசை என்ற பொருளினைத் தரும் சிலைத்தல் என்ற உரிச்சொல் , ஆற்றுப்படை இலக்கியத்தில் இடித்தல், முழங்கல், ஆரவாரம் போன்ற பொருண்மையில் கையாளப்பட்டுள்ளதை அறியமுடிகின்றது. சிலைத்தல் என்பதற்கு , “ஒலித்தல், சினங்கொள்ளுதல், பின்னிடல்” போன்ற பொருள்களும் சுட்டப்படுவதை கழகத் தமி;ழ் அகராதி வழி தெரிந்து கொள்ள முடிகின்றது.

**கம்பலை**

கம்பலை என்ற உரிச்சொல் ஆற்றுப்படையில் பெரும்பாணாற்றுப்படை மற்றும் மலைபடுகடாம் ஆகிய இரண்டு இடங்களில் வந்துள்ளது.

| வ.எண் | வருகையிடம் | பொருள் |
|---|---|---|
| 1. | துஞ்சாக் **கம்பலை** (பெரும்.260) | ஓசை |


http://Creativecommons.org//license/by/4.0/.

| | | |
|---|---|---|
| 2. | கல்லென் **கம்பலை** (மலை.,335) | ஆரவாரம் |

தொல்காப்பியர் அரவப் பொருள் தரும் சொல் என்று சுட்டும் கம்பலை ஆற்றுப்படை இலக்கியத்தில் அரவத்தோடு தொடர்புடைய ஓசை, ஆரவாரம் என்ற பொருண்மையில் வந்துள்ளதை தெரிந்து கொள்ள முடிகின்றது. கம்பலை என்பதற்கு , "ஒலி, ஆரவாரம், நடுக்கம், துன்பம், வயல், யாழோசை, போர்"[14] போன்ற பொருள்களும் வழங்கப்படுவதை கழகத் தமிழ் அகராதி வழி தெரிந்து கொள்;ள முடிகின்றது.

**இரங்கல்**

இரங்கல் என்ற உரிச்சொல் மலைபடுகடாமில் ஒரு இடத்தில் மட்டும் பயின்று வந்துள்ளது.

| **வ.எண்** | **வருகையிடம்** | **பொருள்** |
|---|---|---|
| 1 | முழங்கு **இரங்கு**இசை (மலை.,324) | எதிரொலி |

இரங்கல் இசைப்பொருளைச் சுட்டாமல் எதிரொலி என்ற பொருளினைத் தருவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளமை அறிய முடிகின்றது. இரங்கல் என்ற சொல்லிற்கு , "அழுகை, ஒலி, பிரிவு, வருத்தம், இரங்கற்க எனப் பொருள்படும் ஒரு வியங்கோள் வினைமுற்று , அருள் செய்தல், உள்ளம் உருகுதல், யாழ் நரம்போசை" [15] போன்ற பொருண்மைகளும் தரப்படுவதை கழகத் தமிழ் அகராதி வழி அறிய முடிகின்றது. க்ரியா அகராதியானது இரங்கல் என்பதற்கு , "ஒருவர் மரணம் அடைந்ததற்குத் தெரிவிக்கும் வருத்தம் , அனுதாபம்"[16] என்று பொருள் தருகின்றது. இதிலிருந்து இரங்கல் என்ற சொல் நடைமுறையில் வருத்தத்தை தெரிவிக்க பயன்பாட்டில் இருப்பதை அறிய முடிகின்றது.

**இசைப்பு**

இசைப்பு என்ற உரிச்சொல் ஐந்து ஆற்றுப்படை இலக்கியங்களிலும் ஓசை , ஒலி, இசை போன்ற பொருள்களை தருவதற்கும் தொல்காப்பியர் சுட்டாத புகழ் என்ற பொருண்மையை சுட்டவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

| **வ.எண்** | வருகையிடம் | **பொருள்** |
|---|---|---|
| 1. | விண்ணதிர் இமி**ழிசை** (மலை.,4) | ஓசை |
| 2. | நடுவுநின்று **இசைக்கும்** (மலை.,9) | |
| 3. | இயம்போல் இன்**னிசை** (மலை.,296) | |
| 4. | இமி**ழ்இசை** (திரு.,240) | |
| 5. | கூடத் திண் **இசை** (பெரும்.438) | |


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME - II ISSUE - 2 FEB -2025
E-ISSN : 2584 - 1238

| | | |
|---|---|---|
| 6. | **இசை**பெறு திருவின் (மலை.,39) | முழங்கல் |
| 7. | **இசை**நுவல் வித்தின் (மலை.,60) | புகழ் |
| 8. | தொலையர் நல்**லிசை** (மலை.,70) | புகழ் |
| 9. | பே**ரிசை** நவிரம் (மலை.,82) | |
| 10. | செல்லா நல்**லிசை** (மலை.,388) | |
| 11. | நல்**லிசை** சென்றோர் (மலை.,540) | |
| 12. | நல்**லிசைச்** செவ்வேல் (திரு.,61) | |
| 13. | நாடா நல்**லிசை** (சிறு.பாண்.82) | |
| 14. | பேர் **இசை**(சிறு.பாண்.,125) | |
| 15. | செல்**இசை** நிலைஇய (சிறு.பாண்.,268) | |
| 16. | **இசை**பேர் ஆள(திரு.270) | |
| 17. | **இசை**படு வள்ளையும் (மலை.,342) | இசை |
| 18. | இன்**னிசை** நல்யாழ் (மலை.,381) | |
| 19. | வில்யாழ் **இசைக்**கும் (பெரும்.182) | |
| 20. | முழங்கு **இரங்குஇசை** (மலை.,324) | ஆரவாரம் |
| 21. | வயிர்எழுத்து **இசைப்ப** (திரு.120) | ஒலி |
| 22. | **இசை** பெருக (பொரு.,194) | |
| 23. | வாயில் **இசை**யேன் (பொரு.,67) | சொல் |

ஆற்றுப்படையில் மொத்தம் 23 இடங்களில் இசைப்பு என்ற உரிச்சொல பயன்படுத்தப்பட்டுள்ளது. அவற்றுள் 11 இடங்களில் மட்டுமே இசையோடு தொடர்புடைய ஓசை , ஆரவாரம், ஒலி, போன்ற பொருண்மையில் இசையென்ற உரிச்சொல் பயின்றுவந்துள்ளது. இசை "புகழ்" என்ற பொருளையும் தரும் என்பதையும் தெரிந்துகொள்ள இயலுகின்றது. இசையை


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME - II ISSUE - 2 FEB -2025
E-ISSN : 2584 - 1238

செல்வமாக கருதியதை 'இசைபெறு திருவின்' என்று மலைபடுகடாமில் வருகின்ற வரியில் இசை என்பதற்கு செல்வம் என்று பொருள் தரப்படுவதிலிருந்து அறிந்துகொள்ள முடிகின்றது. மேலும் , இசைப்பு என்பதற்கு, "யாழ் முதலியன வாசிக்கை, இசைவு, பொருந்துகை, கூடிநிற்றல், சொல்லல்"[17] போன்ற பொருண்மைகளும் கழகத் தமிழ் அகராதி வழி பெறப்படுகின்றது. க்ரியா அகராதி , "உடன்படுதல், சம்மதித்தல், மனதிற்கு உகந்ததாக இருத்தல் , முரண்பாடு இல்லாமல் பொருத்தமாக இணைதல், பாடுதல், வாசித்தல்"18 என்று விளக்கம் அளிக்கின்றது.

**இயம்பல்**

இசைப்பொருண்மை தரக்கூடிய உரிச்சொல் என்று தொல்காப்பியர் சுட்டும் சொற்களில் இயம்பல் என்பதும் ஒன்றாகும். பொருநர் ஆற்றுப்படை தவிர்த்து மற்ற அனைத்து ஆற்றுப்படை இலக்கியங்களிலும் இயம்பல் என்ற உரிச்சொல்லின் பயன்பாடு காணப்படுகின்றது.

| **வ.எண்** | **வருகையிடம்** | **பொருள்** |
|---|---|---|
| 1. | கொடுமணி **இயக்கி** (திரு.246) | ஒலி |
| 2. | நெடுவரை **இயம்பும்** இடியுமிழ் (மலை.310 | கூப்பிடும் |
| 3. | மலைபடுகடாஅ மாதிரத் **தியம்பக்** (மலை.348) | ஒலி |
| 4. | பல்**லியக்** கோடியர் (சிறு.125) (சிறு.125) | இசைக்கருவி |
| 5. | இன்**னியம்** கறங்க (திரு.240) | |
| 6. | கூடுகொள் இன்**னியம்** (சிறு.229) | |
| 7. | இன்**னியம்** இயக்கினர் (பெரும்.392) | |
| 8. | இன்**னியம்** கடுப்பக் (பெரும்.56) | |
| 9. | நும்**இயம்** தொடுதல் (மலை.,232) | |
| 10. | கூடு**இயத்து** அன்ன (மலை.269) | |
| 11. | கல்லென்றும் **இயங்கள்** (மலை.277) | |
| 12. | **இயம்**போ லின்னிசை (மலை.296) | |
| 13. | **இயம்**தொய் படாமல் (மலை.365) | |

இயம்பல் என்ற இசை உரிச்சொல்லானது ஒலி , கூப்பிடுதல் (அழைத்தல்) என்ற பொருண்மையில் ஆற்றுப்படை இலக்கியங்களில் பயின்று வந்துள்ளது. மேலும் , 'இயம்' என்று


http://Creativecommons.org//license/by/4.0/.

வேர்ச்சொல் நிலையில் இசைக்கருவிகளைச் சுட்டுகின்றது. கழகத் தமிழ் அகராதியானது இயம்பல் என்பதற்கு, "ஒலித்தல், வாச்சியமொலித்தல், சொல்லுதல், துதித்தல், முழங்குதல், பிதற்றல், பேசல், கதை, காதை"[19] போன்ற பிற பொருண்மைகளைச் சுட்டுகின்றது. க்ரியா அகராதி , "கூறுதல், சொல்லுதல்"[20] என்ற பொருளினை இயம் என்ற சொல்லிற்கு வழங்குவதிலிருந்து கருத்தை சொல்லுவதற்கு இயம்பல் என்ற சொல் பயன்படுவதை அறியமுடிகின்றது.

**கலி**

கலி என்ற இசை உரிச்சொல் ஆற்றுப்படை இலக்கியத்தில் நான்கு இடங்களில் கையாளப்பட்டு உள்ளது.

| வ.எண் | வருகையிடம் | பொருள் |
|---|---|---|
| 1. | தூவற் **கலித்த** புதுமுகை (மலை.,146) | செருக்கி |
| 2. | தூவற் **கலித்த** இவர்நணை (மலை.,514) | |
| 3. | கடுக்**கலித்** தெழுந்த (மலை.,459) | மிக்கு (மிகுதி) |
| 4. | தெருமரல் **கலி**ப்பப் (பொரு.,134) | பெருக |

செய்த என்கிற வினையெச்ச வாய்ப்பாட்டை ஏற்று "கலி" என்ற உரிச்சொல் கலித்த , கலிப்ப என்ற நிலையில் செருக்கி , பெருக போன்ற வேறு பொருள்களை அளிக்கின்றது. மேலும் மிகுதி என்ற பொருளும் அளிப்பதை கூத்தராற்றுபடையின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது.

கழகத் தமிழ் அகராதியானது கலி என்பதற்கு, "அம்பு, ஒலி, ஒருபா, கடல், கடையுகம், கலியுகத்திற்கு அதி தேவதை , கலியென்னேவல், கேடு, சங்ககாலத்திய ஒரு தொகைநூல் , சனி, சிறுமை, போர், வஞ்சகம், வலி, வறுமை, செருக்கு, தழைக்கை, துளக்கம், மகிழ், கர்வி, நெருங்கியிரு, நழுவு, நீக்கு, மனவெழுச்சி, கலிபுருடன், துன்பம், வறுமை, ஆரவாரம், இருமல், கலகம், கலிப்பா, தடிப்பு, தழைத்தல், பனங்கிழங்கு, பெருக்கு, வெளி, எழுச்சி, பொலி, தழை, எழு, வலிமை, முழக்கம், ஒலி"[21] போன்ற பல பொருண்மைகளைக் கூறுகின்றது , க்ரியா அகராதி கலி என்பதற்கு , "நான்கு வகையான தமிழ்ச்சொற்களுள் ஒன்று , கலிப்பா, புராணத்தில் நான்கு யுகங்களுள் தீமை நிறைந்த , தற்பொழுது நடப்பதாகக் கருதப்படும் கடைசி யுகம்"[22] என்று விளக்கம் தருகின்றது.

**தொகுப்புரை**

- இசை உரிச்சொற்களின் இன்றியமையாமையை ஆற்றுப்படையின் வழி அறிய முடிகின்றது.
- இசை என்பதற்கு ஒலி , ஓசை என்பதனை தவிர்த்து பொன் , ஊதியம், சொல், புகழ், இனிமை, சீர், வண்ணம், திசை, இணக்கம், ஐக்கியம், கொடை, பொருந்துவாய், உடன்படுதல், சம்மதித்தல், பண்பு போன்ற பிற பொருள்களையும் தரவல்லன என்பதை அகராதிகள் தருகின்ற விளக்கங்களின் வாயிலாக தெரிந்து கொள்ள முடிகின்றது.


http://Creativecommons.org//license/by/4.0/.

- உரியியலில் கம்பலை , சும்மை, கலி, அழுங்கல், இசைப்பு, துவைத்தல், சிலைத்தல், இயம்பல், இரங்கல் ஆகிய ஒன்பதும் இசை உரிச்சொற்கள் என்று தொல்காப்பியர் அடையாளப்படுத்துகின்றார். இவற்றுள் அழுங்கல், இரங்கல் குறிப்பு பொருள் தரக்கூடிய ஒரு சொல் பல பொருள் என்ற உரிச்சொல் இலக்கணத்தோடு பொருத்திக் காட்டுவதன் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது.
- செய்த என்கிற வினையெச்ச வாய்ப்பாட்டை ஏற்று "கலி" என்ற உரிச்சொல் கலித்த , கலிப்ப என்ற நிலையில் செருக்கி , பெருக போன்ற வேறு பொருள்களை அளிக்கின்றது. மேலும் மிகுதி என்ற பொருளும் அளிப்பதை கூத்தராற்றுபடையின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது.
- இயம்பல் என்ற இசை உரிச்சொல்லானது ஒலி , கூப்பிடுதல் (அழைத்தல்) என்ற பொருண்மையில் ஆற்றுப்படை இலக்கியங்களில் பயின்று வந்துள்ளது. மேலும் , 'இயம்' என்று வேர்ச்சொல் நிலையில் இசைக்கருவிகளைச் சுட்டுகின்றது.
- ஓசை, ஆரவாரம், ஒலி, போன்ற பொருண்மையில் இசையென்ற உரிச்சொல் பயின்றுவந்துள்ளது. இசை "புகழ்" என்ற பொருளையும் தரும் என்பதையும் தெரிந்துகொள்ள இயலுகின்றது. இசையை செல்வமாக கருதியதை 'இசைபெறு திருவின்' என்று மலைபடுகடாமில் வருகின்ற வரியில் இசை என்பதற்கு செல்வம் என்று பொருள் தரப்படுவதிலிருந்து அறிந்துகொள்ள முடிகின்றது.
- இரங்கல் இசைப்பொருளைச் சுட்டாமல் எதிரொலி என்ற பொருளினைத் தருவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளமை அறிய முடிகின்றது.
- இசை என்ற பொருளினைத் தரும் சிலைத்தல் என்ற உரிச்சொல் , ஆற்றுப்படை இலக்கியத்தில் இடித்தல் , முழங்கல், ஆரவாரம் போன்ற பொருண்மையில் கையாளப்பட்டுள்ளதை அறியமுடிகின்றது.
- மலைபடுகடாமில் 26, பொருநர் ஆற்றுப்படையில் 4, திருமுருகாற்றுப்படையில் 7, பெரும்பாணாற்றுப்படையில் 8, சிறுபாணாற்றுப்படையில் 5 என ஆற்றுப்படை இலக்கியங்களில் மொத்தம் 50 இடங்களில் இசை உரிச்சொற்கள் கையாளப்பட்டுள்ளன.

**சான்றெண் விளக்கம்**

1. தொல்காப்பியம், சொல்லதிகாரம்,ப.105
2. மேலது.,ப.106
3. சேனாவரையர்(உ.ஆ)தொல்காப்பியம், சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும், ப.331
4. இளம்பூரணர் (உ.ஆ),தொல்காப்பியம் எழுத்ததிகாரம், இளம்பூரணர் உரை,
5. சேனாவரையர்(உ.ஆ),தொல்காப்பியம் சொல்லதிகாரம், சேனாவரையனார் உரை,ப.201
6. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனாவரையர் உரை.,ப.193
7. மேலது.,ப.188
8. மேலது.,ப.195
9. மேலது.,ப.193
10. மேலது.,ப.195
11. கழகத் தமிழ் அகராதி.,ப.47
12. மேலது.,பக்.558-559


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

13. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி.,ப.749
14. மேலது.,ப.279
15. மேலது.,ப.113
16. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி.,ப.144
17. கழகத் தமிழ் அகராதி.,ப.96
18. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி.,ப.125
19. கழகத் தமிழ் அகராதி.,ப.111
20. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி.,ப.142
21. கழகத் தமிழ் அகராதி.,ப.290
22. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி.,ப.369


http://Creativecommons.org//license/by/4.0/.